அடகு நகை மீட்டு இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்க நிங்கள் இருக்கும் இடத்திலேயே உடனடி பணம் நல்ல அணுகுமுறை
தொடர்புக்கு : 70944 40944
[அரசு அங்கீகாரம் பெற்றது]

admin@dhinakani.com
RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

KANI GYM
CALL:9894808044

| Vol: 03 | Issue: 114 | 4 Pages | 23.11.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 114 | 4 பக்கங்கள் | 23.11.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்**
**கினத்துள தாகும் அறிவு**

**விளக்கம்:**
**ஒருவனுக்கு சிறப்பறிவு மனத்தில் உள்ளது போலக் காட்டி (உண்மையாக நோக்கும் போது) அவன் சேர்ந்த இனத்தில் உள்ளதாகும்.**

## ஸ்காட்லாந்தில் கடும் பனிப்பொழிவால் 100 பள்ளிகள் மூடல்



எடின்பர்க், நவ.23

ஐரோப்பிய நாடான ஸ்காட்லாந்தில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு நிலவுகிறது. எனவே சாலையில் முன் செல்லும் வாகனங்கள் தெரியாத அளவுக்கு பனிமூட்டமாக மாறின. அப்போது சாலையில் நடந்து சென்ற 2 பேர் மீது கார் மோதியது. இதில் படுகாயம் அடைந்த அவர்கள் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அதேபோல் அபெர்டீன்ஷையர் நகர சாலையில் சென்ற மாடி பஸ் பனிக்கட்டிகளுக்கு இடையே சிக்கி கொண்டது. மீட்பு படையினர் அந்த பனிக்கட்டிகளை அப்புறப்படுத்திய பிறகே பஸ் அங்கிருந்து புறப்பட்டது. இதனால் பல மணி நேரம் அந்த சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து வடக்கு பிராந்தியத்தில் கடும் பனிப்பொழிவுக்கான மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனவே அந்த பகுதியில் உள்ள 100க்கும் மேற்பட்ட பள்ளிகள் மூடப்பட்டு உள்ளன.

## ஒரே வாரத்தில் 2வது சம்பவம்: நைஜீரியாவில் பள்ளிக்குள் நுழைந்து 100 மாணவர்கள் கடத்தல்




அபுஜா, நவ.23

நைஜீரியாவின் கெபி மாகாணத்தில் உள்ள ஒரு பள்ளியில் இருந்து 25 மாணவிகளை ஆயுத கும்பல் துப்பாக்கிமுனையில் கடத்தி சென்றது. இதனை தடுக்க முயன்றபோது ஆசிரியர் உள்பட 2 பேர் சுட்டு கொல்லப்பட்டனர். இதனையடுத்து கடத்தல்காரர்களிடம் இருந்து 2 மாணவிகள் தப்பி ஓடி போலீசில் தஞ்சம் அடைந்தனர். அவர்கள் உதவியுடன் மற்ற மாணவிகளை மீட்கும் முயற்சியில் போலீஸ் தீவிரமாக இறங்கி உள்ளது.

இந்த மீட்பு பணிக்கு உதவுவதற்காக நாட்டின் பாதுகாப்பு துறை மந்திரி அல்ஹாஜ்ஜி பெல்லோவை கெபி மாகாணத்துக்கு செல்ல அதிபர் போலா டினுபு உத்தரவிட்டுள்ளார். இவர் கடந்த 2021ம் ஆண்டு மேற்கு ஜம்பாரா மாகாணத்தில் உள்ள ஒரு பள்ளியில் இருந்து கடத்தப்பட்ட 279 மாணவர்களை மீட்பதில் முக்கிய பங்காற்றி இருந்தார். இந்தநிலையில் நைஜர் மாகாணம் பாபிரி நகரில் ஒரு கத்தோலிக்க கிறிஸ்தவ பள்ளி செயல்படுகிறது. இதன் அருகே மாணவர்கள் தங்கும் விடுதியும் அமைந்துள்ளது. அந்த விடுதிக்குள் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் மர்ம நபர்கள் சிலர் நுழைந்தனர். பின்னர் துப்பாக்கி முனையில் 100 மாணவர்களை அந்த கும்பல் கடத்தி சென்றது.

தற்போது ஒரே வாரத்தில் 2வது முறையாக பள்ளி மாணவர்கள் கடத்தப்பட்ட சம்பவம் அங்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதன் காரணமாக நாட்டில் உள்ள அனைத்து உறைவிட பள்ளிகளையும் தற்காலிகமாக மூட ஏற்கனவே அரசாங்கம் உத்தரவிட்டு இருந்தது. இந்தநிலையில் அதிகரித்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக தனது அனைத்து வெளிநாட்டு பயணங்களையும் ஒத்தி வைப்பதாக அதிபர் போலா டினுபு அறிவித்துள்ளார்.

## ஜமைக்கா அழகி மேடையில் தவறி விழுந்ததால் பரபரப்பு



பாங்காக், நவ.23

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் நடைபெற்ற 74வது பிரபஞ்ச அழகி போட்டியில் பங்கேற்ற பெண்கள் பலரும் ஒய்யாரமாக நடந்து சென்றனர். அப்போது ஜமைக்காவை சேர்ந்த கபிரியெல்லே கென்ஹியும் அந்த மேடையில் ஒய்யாரமாக நடந்து சென்றார். ஆனால் எதிர்பாராத விதமாக அவர் கால் தவறி மேடையிலேயே விழுந்தார். இதனையடுத்து அங்கிருந்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் உடனடியாக அவரை தூக்கி விட்டனர். அதிர்ஷ்டவசமாக அவருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. எனினும் இந்த சம்பவத்தால் அங்கு சிறிதுநேரம் சலசலப்பு ஏற்பட்டது. இதற்கிடையே கபிரியெல்லே தவறி விழும் காட்சிகள் சமூக வலைதளங்களிலும் வைரலாக பரவி வருகின்றன.

# கோவை, மதுரை மெட்ரோ திட்டங்கள்: பிரதமர் மோடி உடனடியாக தலையிட வேண்டும் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, நவ 23

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களுக்கான மெட்ரோ ரெயில் சேவைக்கான விரிவான திட்ட அறிக்கைகளை மீண்டும் பரிசீலனை செய்து, தமிழ்நாட்டில் இத்திட்டங்களை நடைமுறைப்படுத்திட தகுந்த அறிவுரைகளை சம்பந்தப்பட்ட துறைக்கு வழங்க பிரதமர் மோடிக்கு , முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எழுதியுள்ளார் .

அந்த கடிதத்தில், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களுக்கு மெட்ரோ ரெயில் அமைப்புகளுக்கான திட்டங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளது ஏமாற்றம் அளிக்கிறது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அதிக அளவிலான தனிநபர் வாகனங்களைக் கொண்டும். நாட்டிலேயே மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வரும் நிலையில் அனைத்து வகையிலும் பெரிய அளவிலான வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் பெரும்நகரங்களில் அதிக திறன் கொண்ட பொது போக்குவரத்து மாற்றுகள் தேவைப்படுகிறது.

கோயம்புத்தூர் மற்றும் மதுரை மெட்ரோ இரயில்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளைதயாரித்து அதை ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருந்ததாகக்மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில், தகுதியின் அடிப்படையில் மற்ற மாநிலங்களில் அனுமதிக்கப்பட்ட இதே போன்ற திட்டங்களுடன் ஒப்பிடும் போது. கோவை மற்றும் மதுரை மெட்ரோ திட்டங்களை நிராகரித்திருப்பது. அந்த இரண்டு பெருநகரங்களில் வாழும் மக்களிடையே ஆழ்ந்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக மு.க. ஸ்டாலின் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



மற்ற மாநிலங்களில் இது போன்ற திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில் ஒன்றிய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் மெட்ரோ ரெயில் திட்டம் குறித்த எங்களது கோரிக்கையை நிராகரித்தது பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு, இரண்டு மாநகரங்களில் வசிக்கும் மக்களிடையே மிகுந்த அதிருப்தியை உருவாக்கியுள்ளதுள்ளார்.

ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறையால் மேற்கோள் காட்டப்பட்டுள்ள காரணங்கள் பொருத்தமற்றவை என்றும். மெட்ரோ ரெயில் கொள்கை 2017ல் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, 20 லட்சம் மக்கள் தொகை என்ற அளவுகோல் இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் உள்ளூர் திட்டப் பகுதியின்படி அதன் மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டிலேயே 20 லட்சத்தைத் தாண்டியிருந்தது . மதுரையிலும் எதிர் பார்க்கப்படும் மக்கள் தொகையை விட அதிகமாக இருக்கும். இந்த 20 லட்சம் என்ற அளவுகோல் ஒரேமாதிரியாகக் கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால் ஆக்ரா, இந்தூர் மற்றும் பாட்னா போன்ற இரண்டாம் நிலை நகரங்களில் மெட்ரோ திட்டம் நிறைவேறியிருக்க வாய்ப்பில்லை

இந்த அளவுகோலை கோவை மற்றும் மதுரை மெட்ரோ திட்டப் பணிகளுக்குச் சுட்டிக்காட்டுவது என்பது. இந்த நகரங்களுக்கு எதிரான ஒன்றிய அரசின் பாகுபாட்டு நிலையையே காட்டுவதாகவும். எனவே ஒன்றிய அரசு மற்ற மா நி ல ங் க ளி ல் மே லே குறிப்பிடப்பட்ட நகரங்களில் மெட்ரோ திட்டத்தைச் செயல்படுத்திட மேற்கொண்ட முடிவினைப் போன்று தமிழ்நாட்டிலுள்ள இந்த மாநகரங்களிலும் செயல்படுத்திட ஏதுவாக இந்த அளவுகோலை நீக்க வேண்டும்.

மேலும், கோயம்புத்தூர் நகரில் இந்தத் திட்டத்திற்கான பயணிகளின் அடர்வு எண்ணிக்கை சென்னையில் உள்ள பயணிகளின் அடர்வு எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பயணிகளின் எண்ணிக்கை என்பது பல காரணிகளைச்சார்ந்திருப்பதால் இது பொருத்தமானதல்ல.

இந்த இரண்டு நகரங்களும் சென்னையிலிருந்து வேறுபட்ட பயண முறைகளைக் கொண்டுள்ளன என்றும் விரிவான போக்குவரத்து ஆய்வுகளுக்குப் பிறகு RITES தயாரித்த கோயம்புத்தூருக்கான விரிவான இயக்கத் திட்டம் முன்மொழிய ப்பட்ட துறைகளில் மெட்ரோ பயணத்தின் தேவையைத் தெளிவாகக் கணித்துள்ளது.

மதுரைக்கும் 2011ஆம் ஆண்டின் விரிவான இயக்கத் திட்டத்தில், பொதுப் போக்குவரத்து அமைப்பு (BRT) முன்மொழியப்பட்டதாகவும் ஆனால் பெரும்பாலான பாதைகளின் நீளம் உயர்த்தப்பட வேண்டியிருப்பதால். இரயில் போக்குவரத்திற்கான அமைப்பையும் பரிசீலிக்கலாம்.

மேலும், விரிவான திட்ட அறிக்கை ஆய்வுகள் போக்குவரத்து கணிப்புகளின் அடுத்தடுத்த தனிப்பட்ட மதிப்பீடுகளைச் செய்துள்ளன என்றும். இது மெட்ரோ வழித்தடங்களின் தேவையை நியாயப்படுத்தியது என்றும். இந்தக் காரணிகள் போதுமான அளவு கருத்தில் கொள்ளப்படவில்லை.

மெட்ரோ வழித்தட உரிமையைப் பொறுத்தவரை. இந்தியாவின் பெரும்பாலான நகரங்களில் இத்திட்டங்களுக்குத் தனியார் நிலங்களைக் கையகப்படுத்த வேண்டிய கட்டாயம் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்று.

கோயம்புத்தூர் மற்றும் மதுரை நகரங்களில் முன்மொழியப்பட்ட மெட்ரோ திட்டங்களுக்கு நிலம் கிடைப்பது என்பது ஒரு தடையாக இருக்காது என்பதை தமிழ்நாடு அரசு உறுதி செய்யும்,

இந்தச் சூழ்நிலையில், ஒன்றிய வீட்டுவசதிமற்றும்நகர்ப்புறவிவகாரங்கள் துறை அமைச்சகம் எழுப்பியுள்ள ஐயங்களுக்கு உரிய விரிவான விளக்கங்களைச் சமர்ப்பிக்க சிறப்பு முயற்சிகள் துறைக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் மதுரை மற்றும் கோவை மெட்ரோ திட்டங்களு க்கான கருத்துருவைத் திருப்பியனு ப்பும் முடிவை மறுபரிசீலனை செய்ய சம்பந்தப்பட்ட அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளதுடன் தேவைப்படின் இத்திட்டங்கள் குறித்து விரிவான விளக்கம் அளிக்க தமது குழுவுடன் புதுடெல்லியில் இந்திய பிரதமர் அவர்களை சந்திக்க தயாராக இருப்பதாகவும் முதல்வர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## துப்புரவு பணியாளர்களின் போராட்டம் தொடரும் என உழைப்போர் உரிமை இயக்க தலைவர் பாரதி தெரிவித்துள்ளார்



சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் செய்தியாளர்களை சந்தித்த உழைப்போர் உரிமை இயக்கம் தலைவர் பாரதி, பணி நிரந்தரம் கேட்டு உண்ணா நிலை போராட்டம் 6 ஆம் நாளை எட்டியுள்ளதாகவும்,

ஆனால் அரசு சார்பில் எந்த பேச்சுவார்த்தையில் ஈடுபடவில்லை என தெரிவித்தார்

தூய்மை பணியாளர்களில் ஒப்பந்தத்தில் மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஊழலில் ஈடுபட்டு வருகிறார்ஆணையர் குமரகுருபரன் வந்த பிறகு தான் தூய்மை பணி தனியார் மயம் ஆக்கப்பட்டது

IAS படித்ததே ஏஜென்டாக மாறுவதற்காக தான் என்ற வகையில் குமரகுருபரன் செயல்பாடுகள் உள்ளது திமுக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற கூறினால் சாப்பாடு தருகிறேன் என கூறுகிறார்கள் யார் அரசிடம் சாப்பாடு கேட்டது என்ற கேள்வி எழுப்பினார் தூய்மை பணியாளர்களுக்கு 4 1/2 ஆண்டுகள் கழித்து ஓய்வு அறை, கழிப்பறை கட்டித்தரப்படும் என்று கூறுகிறார்கள் இத்தனை ஆண்டுகள் என்ன செய்தார்கள் என்றும் வினவினார்?

தேர்தல் காலத்தில் ஆட்சியாளர்கள் அவர்கள் சாதனையை பேசட்டும்,நாங்கள் வீதி தோறும் அவர்கள் செய்ய அநீதிகளை பேசுவோம்வ ருகிற திங்கட்கிழமை தூய்மை பணியாளர்கள் மற்றும் குடும்பத்தினரின் வாக்காளர் அடையாள அட்டை திரும்ப ஒப்படைக்கும் போராட்டம் நடத்த உள்ளதாக கூறினார்

திமுக கூட்டணி கட்சிகள் விடுதலை சிறுத்தைகள் கட்சி , இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழக வெற்றிக் கழகம்,அண்ணா திராவிட முன்னேற்ற கழகம், பாரதிய ஜனதா கட்சி என எல்லாம் கட்சியும் துப்புரவு பணியாளர்களை ஆதரிக்கிறது, ஆனால் ஆதரிக்காத கட்சி திராவிட முன்னேற்ற கழகம் தான் என குற்றம்சாட்டினார்

4 மற்றும் 8 மண்டலங்கள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் துப்புரவு பணியாளர்கள்போராட்டம்சென்னைமுழுவதும்விரிவடையும் என கூறினார்

## திண்டுக்கல் ரெயில் நிலையத்தில் 4 கிலோ கஞ்சா பறிமுதல்

முன்பதிவுல்லா பெட்டியில் பயணிகள் இருக்கைக்கு அடியில் கஞ்சா இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

கோயம்புத்தூரில் இருந்து நாகர்கோவில் வரை செல்லும் நாகர்கோவில் எக்ஸ்பிரஸ் ரெயில் திண்டுக்கல் ரெயில் நிலையத்திற்கு வந்தது. அப்போது அந்த ரெயிலில் திண்டுக்கல் ரெயில்வேகாவல்நிலைய ஆய்வாளர்தூயமணிவெள்ளைச்சாமி உத்தரவின் பேரில் சிறப்பு சார்பு ஆய்வாளர் மணிகண்டன் காவலர்கள் சக்திசண்முகம், மதுரைவீரன், செந்தில்குமார், மதன்ராஜ் ஆகியோர் திடீர் சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனையின்போது முன்பதிவுல்லா பெட்டியில் பயணிகள் இருக்கைக்கு அடியில் கேட்பாரற்று கிடந்த பை ஒன்று கண்டுபிடிக்க ப்பட்டது. அந்த பையை திறந்து பார்த்தபோது, அதில் சுமார் 4 கிலோ 400 கிராம் எடை அளவிற்கு கஞ்சா போதைப்பொருள் இருந்தது தெரியவந்தது. அதனை ரெயில்வேபோலீசார்பறிமுதல்செய்துவிசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள் தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9448699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

## 'ஜனநாயகத்தின் குரல் மீண்டும் ஓங்கி ஒலித்துள்ளது' ஆதவ் அர்ஜூனா

கரூர் துயர சம்பவத்தில் 41 பேர் பலியான நிலையில், த.வெ.க. நிர்வாகிகளை காவல் துறை கைது செய்து வந்தது. இந்நிலையில் தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா கரூர் துயர சம்பவம் தொடர்பாக தனது 'எக்ஸ்' தள பக்கத்தில் ஒரு பதிவை வெளியிட்டார். அதில், தமிழக அரசை எச்சரிக்கும் வகையில் பதிவிட்டிருந்தார். பின்னர் சிறிது நேரத்தில் அந்த பதிவை ஆதவ் அர்ஜுனா நீக்கிவிட்டார்.

ஆனால் இந்த பதிவின் அடிப்படையில் அவர் மீது சென்னை சைபர் குற்றப்பிரிவு போலீசார் கலவரத்தை தூண்டுவது, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பது உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர். தன் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி ஆதவ் அர்ஜுனா சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்திருந்தார்.

உள்நோக்கத்துடன் கருத்து பதிவிடவில்லை என்றும், அந்த பதிவு உடனே அது நீக்கப்பட்டுவிட்டதாகவும் ஆதவ் அர்ஜுனா தரப்பில் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, ஆதவ் அர்ஜுனா மீதான வழக்கை சென்னை ஐகோர்ட்டு ரத்து செய்தது.

இதனையடுத்து, 'ஜனநாயகத்தின் குரல் மீண்டும் ஓங்கி ஒலித்துள்ளது' என ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ஜனநாயகத்தின் குரல் மீண்டும் ஓங்கி ஒலித்துள்ளது. ஜனநாயகத்தின் அடிப்படை உரிமையான கருத்துரிமைக்கு தொடர்ந்து நெருக்கடியை கொடுத்துவரும் ஆட்சியாளர்களின் ஆதிக்க உணர்வுக்கும், அடக்குமுறைக்கும் எதிரான ஒரு தீர்ப்பை சென்னை ஐகோர்ட்டு வழங்கியுள்ளது.

ஜனநாயக உரிமைகள் பறிபோகிற நேரங்களில் எல்லாம், அவற்றை மீட்டுக் கொடுத்து, ஜனநாயகத்தைக் காக்கும் மன்றங்களாக உள்ள நீதிமன்றங்களுக்கு என் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஆதிக்கம் எங்கெல்லாம் தலைதூக்குகிறதோ, அங்கெல்லாம் நம்முடைய எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கும்" என்று பதிவிட்டுள்ளார்.

# திமுக ஆட்சியில் பள்ளி முதல் பள்ளிவாசல் வரை பெண்களைத் தொடரும் பாலியல் கரங்கள்: நயினார் நாகேந்திரன் கண்டனம்

சென்னை நவ.23

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

விருதுநகர் மாவட்டம் நரிக்குடி ஒன்றியத்தில் உள்ள தர்காவில் அஸ்ரத் ஆக நியமிக்கப்பட்டுள்ள அப்துல் அஜீஸ் என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை அன்று புனித நீர் தெளிப்பதற்காகக் குழந்தையுடன் தர்காவிற்கு வந்த பெண்ணைப் பாலியல் வன்கொடுமை செய்ய முயன்று, கத்தியால் குத்தி தாக்கியதாக வெளிவந்துள்ள தகவல் கடும் அதிர்ச்சியளிக்கிறது. இந்தக் கொடும் தாக்குதலில் இருந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியிருக்கும் பாதிக்கப்பட்ட அப்பெண் விரைவில் குணமடைய இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

படிக்கும் பள்ளி முதல் புனிதமான பள்ளிவாசல் வரை பாலியல் கரங்கள் பெண்களைத் தொடர்கிறது என்றால் திமுக அரசையும், அதன் கட்டுப்பாட்டில் இயங்கும் சட்டம் ஒ ழு ங் கை யு ம் குற்றவாளிகள் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை என்று தானே அர்த்தம்? அதிலும் அப்துல் அஜீஸ் மீது ஏற்கனவே பல பாலியல் குற்றச்சாட்டுகள் உள்ளதாகச் செய்திகள் உலா வரும் நிலையில், அவர் தர்காவின் தலைவராக எப்படி



நியமிக்கப்பட்டார்?

மேலும், விருதுநகர் மாவட்டத்தையே பதற்றத்தில் ஆழ்த்தியுள்ள இச்சம்பவத்தைப் பற்றி திமுகவின் போலி பெண் போராளிகளும், பிற தலைவர்களும் இதுவரை வாய் திறக்காதது ஏன்? இஸ்லாமிய மக்களின் ஓட்டு வங்கி அடி வாங்கிவிடும் என்ற அச்சமா? அல்லது வழக்கம்போல இந்தப் பாலியல் வழக்கிலும் உடன்பிறப்புகள் ஒளிந்துள்ளனரா?

சமூகநீதி, மத நல்லிணக்கம் குறித்தெல்லாம் பிறருக்கு வகுப்பெடுக்கும் திமுக அரசு, இந்த விவகாரத்தை எவ்வித சமரசமுமின்றி அணுக வேண்டும் எனவும், குற்றவாளிக்கு கடும் தண்டனை கிடைப்பதை உறுதிசெய்வதோடு, பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு உரிய நீதியைப் பெற்றுத் தர வேண்டுமெனவும் முதல்வர் மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# கட்டிடம் இடிக்கும் பணியின்போது மேற்கூரை சரிந்து விழுந்து 2 பேர் பலி

சென்னை நவ.23

சென்னை மாவட்டம் வெட்டுவாங்கேணி பகுதியில் பழைய கட்டிடம் உள்ளது. அந்த கட்டிடத்தை உடைக்கும் பணியில் இன்று தொழிலாளர்கள் சிலர் ஈடுபட்டனர்.

தொழிலாளர்கள் கட்டிடத்தை உடைத்துக்கொண்டிருந்தபோது இரும்பு சாரத்தால் அமைக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் மேற்கூரை சரிந்து விழுந்தது.



இந்த சம்பவத்தில் கட்டிடத்தை உடைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வடமாநிலமான ஒடிசாவை சேர்ந்த பாபு மாலிக், சசிகாந்த் மாலிக் ஆகிய 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், உயிரிழந்த 2 பேரின் உடலையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்தவிபத்து குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கேளம்பாக்கம் ஓஎம்ஆர் சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் பயங்கர தீ விபத்து

செங்கல்பட்டு நவ.23

சென்னையை அடுத்த கேளம்பாக்கத்தில் ஓஎம்ஆர் சாலையில் அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. இந்த அடுக்குமாடி குடியிருப்பில் நூற்றுக்கணக்கான குடும்பத்தினர் வசித்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த அடுக்குமாடி குடியிருப்பில் இன்று மாலை பயங்கர



தீ விபத்து ஏற்பட்டது. தகவலறிந்து விரைந்து சென்ற தீயணைப்புத்துறையினர் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த தீவிபத்தில் யாருக்கு பாதிப்பு ஏற்படவில்லை. அதேவேளை, இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகள்; மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

சென்னை, நவ.23

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"தொழிலாளர்கள் வரலாற்றில் நூற்றாண்டுகளுக்கும் மேலாக, உரிமைப் போராட்டங்கள் நடத்திய தன் விளைவாக காலனி ஆட்சி காலத்திலும், விடுதலை பெற்ற பிறகும் தொழிலாளர் உரிமைகளை பாதுகாக்கும் 44 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்த சட்டங்களில் 15 சட்டங்களை முழுமையாக ரத்து செய்துவிட்டு 29 சட்டங்களை திருத்தி, சுருக்கி நான்கு சட்டத் தொகுப்புகளாக மத்திய அரசு 5 ஆண்டுகளுக்கு முன்பு சட்டங்கள் நிறைவேற்றியது.

தொழிலாளர்களின் கடும் எதிர்ப்பு காரணமாக அமலாக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த, அந்த சட்டங்களை, திடீரென முதல் அமல்படுத்தப் போவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. ஏதோ தொழிலாளர் நலன்களை காப்பதற்காக கொண்டுவருவதுபோன்ற ஆரவார முழக்கத்துடன்



சட்டங்களை அமலாக்க அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டங்கள், உண்மையில் தொழிலாளர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை ஆகும்.

முதலில், இனி சட்ட உரிமைகள் பெற்ற நிரந்தர தொழிலாளர்கள் எங்கும் இருக்க மாட்டார்கள் என்பதை இச்சட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன. சில வாரங்கள் அல்லது மாதங்கள் வேலைக்கு வைத்துவிட்டு, எந்த நேரத்திலும் எந்தக் காரணமும் இல்லாமல் வேலையளிப்போர், தொழிலாளர்களை வேலையில் இருந்து வெளியேற்ற இச்சட்டங்கள் வழி வகுக்கின்றன.

தொழிலாளர்கள் சங்கமாக சேரும் உரிமை, கூட்டாக வேலையளிப்பவரிடம் கோரிக்கை வைக்கும் உரிமை, பேரம் பேசும் உரிமை ஆகியவை சட்ட ரீதியாக பறிக்கப்படுகின்றன. தொழிலாளர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்த பணிப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை இந்தச் சட்டங்கள் மறுக்கின்றன.

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக வார்த்தை அளவில் இச்சட்டங்களில் பேசினாலும், அவை எவ்வாறு செயல்படுத்தப்படும் என்பது பற்றி, இந்த சட்ட தொகுப்புகளில் எதுவும் சொல்லப்படவில்லை. அதற்கான நிதியும் ஒதுக்கீடும் இல்லை.

சட்ட விதிகளின்படி தொழில் நடத்தப்படுகிறதா என்பதை அரசு ஆய்வு செய்யும் முறை தளர்த்தப்பட்டு, சட்ட விதிகள் அமலாக்கப்படுகின்றன என்று முதலாளிகளே தமக்கு தாமே சான்றிதழ் வழங்கிக் கொள்ள இச்சட்டம் அதிகாரம் வழங்குகிறது.

தொழில் நடத்துவதை எளிமைப்படுத்துதல் என்ற பெயரில், தொழிலாளர்களை அளவற்ற முறையில் சுரண்டுவதற்கான முழு சுதந்திரத்தை இவை முதலாளிகளுக்கு வழங்குகின்றன. தொழிலாளர்களுக்கு விரோதமான இந்த சட்டங்களை, கார்ப்பரேட் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தன்னிச்சையாக மத்திய அரசு திடீரென செயலுக்கு கொண்டு வந்திருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. தொழிலாளர்களின் சட்டபூர்வ உரிமைகளை மறுக்கும் அறிவிக்கையை திரும்பப் பெற வேண்டும் என மத்திய அரசை, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மனைவியை பாம்பு கடித்ததால் கணவர் விஷம் குடித்து தற்கொலை

திருவாரூர், நவ.23

திருவாரூர் மாவட்டம் நன்னிலத்தை அடுத்த பேரளம் அருகேயுள்ள கொல்லாபுரம் தோப்புத்தெருவை சேர்ந்தவர் நாகராஜன் (60 வயது). இவரது மனைவி லலிதா (54 வயது). இந்த தம்பதியர் கூலி வேலை செய்து வந்தனர். இந்தநிலையில்சம்பவத்தன்று லலிதாவயல் வேலைக்கு சென்றபோது அவரை பாம்பு கடித்து விட்டது. இதனால் அவர் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.

மனைவியை பார்ப்பதற்காக நாகராஜன் மருத்துவமனைக்கு சென்றார். அப்போது லலிதாவின் உடல்நிலை மோசமாக இருப்பது அவருக்கு தெரிய வந்தது. இதனால் நாகராஜன் மனம் வெதும்பினார். பாம்பு கடித்து உயிருக்கு ஆபத்தான நிலையில் தனது மனைவி இருப்பதை அறிந்த அவரால் அதை தாங்கிக்கொள்ள முடியவில்லை.

மனைவி இறந்து விடுவார் என்று கருதிய அவர் வீட்டில் வயலுக்கு அடிக்கும் பூச்சி மருந்தை குடித்தார். உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்த நாகராஜனை சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி நாகராஜன் நேற்று பரிதாபமாக இறந்தார்.

இதுகுறித்து பேரளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் பாம்பு கடித்து மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த நாகராஜனின் மனைவி நலமுடன் வீட்டுக்கு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னைக்கு ரெயிலில் கஞ்சா கடத்தி வந்த வாலிபர் கைது

சென்னை, நவ.23

ஆந்திர மாநிலத்தில் இருந்து சென்னைக்கு ரெயிலில் கஞ்சா கடத்தி வருவதாக தனிப்படை போராருக்கு தகவல் கிடைத்தது.

இந்த தகவலின் பேரில் சப்இன்ஸ்பெக்டர் ஆனந்தகுமார் மற்றும் போலீசார் சென்ட்ரல் வந்த ரெயில் பயணிகளை கண்காணித்தனர். அப்போது எண்ணூர் சுனாமி குடியிருப்பைச்



சேர்ந்த அண்ணாமலை(33) என்பலர் ஆந்திர மாநிலத்தில் இருந்து ரூ.37ஆயிரம் கொடுத்து 5 கிலோ கஞ்சாலை வாங்கி கடத்தி வந்து இருப்பது தெரிந்தது.

இதையடுத்து அண்ணாமலையை போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து 5 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணையில் அவர் மீது ஏற்கனவே 19 வழக்குகள் உள்ளது தெரியலந்தது. கஞ்சா யாருக்கு கடத்தப்பட்டது? கஞ்சாவிற்பனை கும்பல் குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# இன்று மக்களை சந்திக்கிறார் தவெக தலைவர் விஜய்.. 2 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி



சென்னை, நவ.23

த.வெ.க. தலைவர் விஜய் கடந்த செப்டம்பர் 27ந்தேதி கரூரில் பிரசாரம் மேற்கொண்டபோது நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்திற்கு பிறகு பொது நிகழ்வுகளில் விஜய் பங்கேற்காமல் இருந்தார். அந்த சம்பவத்தில் இருந்து கொஞ்சம், கொஞ்சமாக மீண்டு வந்த விஜய், கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சென்னைக்கு அழைத்து, ஆறுதல் கூறினார்.

தொடர்ந்து கட்சியின் சிறப்பு பொதுக்குழுவை கூட்டினார். இந்த பொதுக்குழுவில் மீண்டும் த.வெ.க. பயணம் தொடரும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். மீண்டும் மக்கள் சந்திப்புக்கு அவர் ஆயத்தமானார். இதற்காக தமிழகம் முழுவதும் 4 ஆயிரம் பேரை தேர்வு செய்து மக்கள் பாதுகாப்பு படையை உருவாக்கினார். அவர்களுக்கு ராணுவம் மற்றும் போலீஸ் துறையில் ஓய்வு பெற்ற அதிகாரிகளை கொண்டு பயிற்சி அளித்தார்.

இந்த பயிற்சி சென்னையை அடுத்த செம்மஞ்சேரி தனியார் கல்லூரி வளாகத்தில் நடந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் தலா 100 பேருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தநிலையில், விஜய் சேலத்தில் இருந்து டிசம்பர் 4ந்தேதி முதல் பிரசாரம் செய்ய முடிவு செய்தார். இதற்காக 3 இடங்கள் தேர்வு செய்து போலீசாரிடம் வழங்கப்பட்டது. ஆனால் தீப திருவிழா மற்றும் சில பாதுகாப்பு காரணங்களால் வேறு ஒரு தேதியில் பிரசாரத்தை வைத்துக்கொள்ள போலீசார் அறிவுறுத்தினர்.

இதற்கிடையே, நாளை (ஞாயிற்றுக்கிழமை) சென்னை அடுத்த காஞ்சீபுரம் மாவட்டம் சுங்குவார்சத்திரத்தில் உள்ள தனியார் கல்லூரியில் மக்கள் சந்திப்பு கூட்டத்தை நடத்த விஜய் முடிவு செய்துள்ளார். குறிப்பாக இதில் காஞ்சீபுரம் மாவட்டத்தை சேர்ந்த 1,500க்கும் மேற்பட்ட த.வெ.க. தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்க உள்ளனர். காஞ்சீபுரம் மக்களின் வேண்டுகோளுக்காக இந்த சிறப்பு மக்கள் சந்திப்பு நடத்த இருப்பதாக த.வெ.க. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மக்கள் சந்திப்புக்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை தொண்டர் படையினருடன், மக்கள் பாதுகாப்பு படையினர் செய்து வருகின்றனர். இதற்காக கல்லூரி வளாக உள் அரங்கத்தில் போதுமான அளவு இருக்கைகளும், தடுப்பு வேலிகளும் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கூட்ட நெரிசல் எதுவும் இல்லாமல் நிகழ்ச்சி நடத்தப்பட இருப்பதாக த.வெ.க. தெரிவித்துள்ளது.

இந்நிலையில் விஜய் பங்கேற்கும் மக்கள் சந்திப்பு நிகழ்வில் 2 ஆயிரம் பேருக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டு ள்ளது. இதுதொடர்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

தலைமை நிலையச் செயலக அறிவிப்பு

மக்கள் விரும்பும் முதல்அமைச்சர் வேட்பாளர், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் அவர்கள் கலந்து கொள்ளும் உள்ளரங்கு மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி, நாளை (23.11.2025) ஞாயிற்றுக்கிழமை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், காலை 11.00 மணிக்கு நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க உள்ளரங்கு சந்திப்பு நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த, QR குறியீட்டுடன் கூடிய நுழைவுச்சீட்டு அளிக்கப்பட்டுள்ள 2 ஆயிரம் பேர் மட்டுமே இந்த உள்ளரங்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. கழகத் தோழர்களும் பொது மக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குற்றால அருவியில் கடும் வெள்ளப்பெருக்கு குளிக்க தடை

தென்காசி, நவ.23

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை பெய்து வரும் நிலையில் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. தென்காசி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி அமைந்துள்ள குற்றால அருவிகளான மெயின் அருவி,



ஐந்தருவி, பழைய குற்றாலம், சிற்றருவி, புலி அருவி உள்ளிட்ட அனைத்து அருவிகளிலும் குளிப்பதற்காக சுற்றுலா பயணிகளின் வருகை கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில், மேற்கு தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக குற்றாலம் மெயின் அருவியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குற்றாலம் மெயின் அருவியில் 2வது நாளாக சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. ஐந்தருவியிலும் காலையில் நீர்வரத்து அதிகரித்ததால் அங்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தற்போது ஐயப்ப பக்தர்கள் சீசன் காலம் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், ஏராளமான ஐயப்ப பக்தர்கள் குற்றாலம் பகுதியில் உள்ள அருவிகளுக்கு வருகை தந்தனர். தற்போது மெயின் அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் அவர்கள் குளிக்க முடியாமல் ஏமாற்றத்துடனே திரும்பி சென்று வருகின்றனர்.

# கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவு: முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்

சென்னை, நவ.23

கவிஞர் ஈரோடு தமிழன்பன் வயதுமூப்பு மற்றும் உடல்நலக் குறைவு காரணமாக இன்று காலமானார். அவருக்கு வயது 92. அவரது மறைவுக்கு பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கவிஞர் ஈரோடு தமிழன்பன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:

மரபுக்கவிதை, புதுக்கவிதை என இரண்டிலும் சிறந்து, தமிழுக்கு வளம் சேர்த்த கவிஞர் ஈரோடு தமிழன்பன் என்கிற ந. செகதீசன் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன். பாவேந்தர் பாரதிதாசனுடன் பத்தாண்டுகள் நெருங்கிப் பழகிய சிறப்புக்குரியவர் ஈரோடு தமிழன்பன். சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் செய்தி வாசிப்பாளர், பேராசிரியர், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர், அறிவியல் தமிழ்மன்ற உறுப்பினர், அரிமா நோக்கு இதழின் ஆசிரியர் எனப் பல்வேறு பொறுப்புகளில் அவர் ஆற்றிய பணிகளும் எழுதிய நூல்களும் ஏராளம்.

தமது இடையறாத தமிழ்ப் பணிகளுக்கு அங்கீகாரமாகக் கலைமாமணி, சாகித்ய அகாதெமி, பாரதிதாசன் விருது, சிறந்த நூலுக்கான தமிழ்நாடு அரசின் விருது, குறள்பீட விருது, முரசொலி அறக்கட்டளையின் கலைஞர் விருது, கவிக்கோ விருது என எண்ணற்ற விருதுகளைப் பெற்று அவற்றுக்குப் பெருமை சேர்த்திருக்கிறார் கவிஞர் ஈரோடு தமிழன்பன்.

நமது திராவிட மாடல் ஆட்சிக்கு வந்ததும், 2022




ம் ஆண்டு முத்தமிழறிஞரின் பிறந்தநாளில் கனவு இல்லம் திட்டம் திட்டத்தின்கீழ், அவருக்கு அடுக்குமாடிக் குடியிருப்பில் வீடு வழங்கியிருந்தோம். மேலும், அவர் இயற்றிய 'கீழடியில் கேட்ட தாலாட்டுகள்', 'நெருக்கடி நேரத்தில் கலைஞரோடு' (கவிதைகளும் கட்டுரைகளும்) ஆகிய நூல்களையும், வட அமெரிக்க ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை தயாரித்துள்ள, ஈரோடு தமிழன்பன் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த "மகாகவி" என்ற ஆவணப்படத்தையும் முதல்அமைச்சராக வெளியிடும் பேற்றினைப் பெற்றிருந்ததை இவ்வேளையில் நினைவுகூர்கிறேன்.


இறுதிக்காலம் வரையிலும் பல வகைமைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றிய, நீண்ட நெடிய பெருவாழ்வுக்குச் சொந்தக்காரரான கவிஞர் ஈரோடு தமிழன்பனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும், தமிழன்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# சென்னை: சாலையில் நடந்து சென்ற இளம்பெண்ணிடம் பாலியல் சீண்டல்: 10ம் வகுப்பு மாணவன் கைது

சென்னை, நவ.23

சென்னை புழல் செக்ரடேரியட் காலனி பகுதியில் 23 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் இரவு 7 மணி அளவில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக பைக்கில் சென்ற நபர் அவரிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டுள்ளார். பின்னர் அங்கிருந்து தனது பைக்கில் தப்பிச் சென்றுள்ளார்.

இதுகுறித்து பாதிக்கப்பட்ட பெண் புழல் போலீசில் புகார் அளித்தார். அதன் பேரில் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்ட பிரிவில் வழக்குப்பதிவு செய்த போலீசார், பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் யார் என்பது பற்றி விசாரணை நடத்தினர். சம்பவ இடத்தில் பொருத்தப்பட்டிருந்த கேமரா காட்சிகளை ஆய்வு செய்தபோது, பாலியல் சீண்டலில் ஈடுபட்ட நபர் ஹெல்மெட் அணிந்து, முகத்தை துணியால் மறைத்து பைக்கில் வந்து பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது தெரிய வந்தது.



இதைத் தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற மறுநாள் போலீசார் அதே பகுதியில் ரகசியமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். முந்தைய நாள் பாலியல் சீண்டலில் ஈடுபடும் போது எப்படி முகத்தை மூடி இருந்தாரோ அதே போன்று மறுநாளும் அந்த நபர் முகத்தை மூடி பைக்கில் வந்தார்.

அவரை தனிப்படை போலீசார் மடக்கிப்பிடித்து விசாரணை நடத்தினர்.

அப்போது இளம் பெண்ணிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டது 15 வயது சிறுவன் என்பது தெரிய வந்தது. அதே பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 10 ம் வகுப்பு படித்து வரும் அந்த சிறுவன், தனது தந்தையின் பைக்கில் சுற்றி வந்து இது போன்று பாலியல் சீண்டலில் ஈடுபட்டது உறுதியானது. இதைத் தொடர்ந்து சிறுவனை போலீசார் கைது செய்து, பைக்கை பறிமுதல் செய்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை காவிரி டெல்டா பகுதியாக அறிவித்து அரசாணை வெளியீடு

சென்னை, நவ.23

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டத்தில் உள்ள திருமுட்டம் வருவாய் வட்டத்தைச் சார்ந்த 38 வருவாய் கிராமங்களின் பாசனப்பரப்பை காவிரி டெல்டா பகுதியாக அறிவித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

குறியீடு பல ஆண்டுகளாக விவசாயிகள் கோரிக்கை விடுத்த நிலையில்,




கடந்த ஜூலையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இதற்கான அறிவிப்பை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# நிலத்தகராறில் தி.மு.க. நிர்வாகி சுட்டுக்கொலை போலீஸ் விசாரணை

சேலம், நவ.23

சேலம் கருமந்துறை பகுதியை சேர்ந்தவர் தி.மு.க. கிளைச் செயலாளரும், விவசாயியுமான ராஜேந்திரன். இவர் தனது விவசாய நிலத்திற்கு சென்று கொண்டிருந்தபோது,

மர்ம நபர்கள் சிலர் அவரை நாட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துவிட்டு, அங்கிருந்து தப்பியோடினர்.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலிசார்,

உயிரிழந்த ராஜேந்திரனின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்த கொலை சம்பவம் தொடர்பாக 2 பேரை பிடித்து போலீசார் தீவிர



விசாரணை நடத்தி வருகின்றனர். நிலத்தகராறு காரணமாக இந்த கொலை நடத்திருப்பதாக முதற்கட்ட விசாரணையில் தகவல் வெளியாகியுள்ளது.

# "பவாரியா கொள்ளை கும்பலை பிடிக்க உதவிய கைரேகை.." ஓய்வுபெற்ற டி.ஜி.பி. ஜாங்கிட் பேட்டி

சென்னை நவ.23

கடந்த 1995 முதல் 2005 வரை வடமாநிலங்களைச் சேர்ந்த 'பவாரியா' கொள்ளையர்கள், தமிழகத்தில் பல கொலை, கொள்ளை சம்பவங்களை அரங்கேற்றி பீதியை ஏற்படுத்தினர். அதில் முக்கியமாக கடந்த 2005ம் ஆண்டு திருவள்ளூர் மாவட்ட கும்மிடிப்பூண்டி தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ சுதர்சனத்தின்வீட்டிற்குள் புகுந்த பவாரியா கொள்ளையர்கள், அவரை சுட்டுக்கொன்றுவிட்டு வீட்டில் இருந்த நகைகளை கொள்ளையடித்துச்சென்றனர்.

தமிழகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்த வழக்கில் கொள்ளையர்களை சுட்டுப்பிடிக்க அப்போதைய முதல்அமைச்சர் ஜெயலலிதா அதிரடியாக உத்தரவிட்டார். இதையடுத்து ஐ.ஜி. ஜாங்கிட் தலைமையில் தனிப்படை அமைத்து தீவிர விசாரணை நடத்திய போலீசார், அடுத்த ஒரு மாதத்திற்குள் ராஜஸ்தான், அரியானாவை சேர்ந்த 9 பவாரியா கொள்ளையர்களை கைது செய்து தமிழகத்திற்கு கொண்டு வந்தனர். கைதான 9 பேரில் 3 பேர் ஜாமீனில் வெளியாகி தலைமறைவான நிலையில், 2 பேர் சிறையிலேயே உயிரிழந்தனர்.

தற்போது சிறையில் உள்ள ஜெகதீஷ், ராகேஷ், அசோக் மற்றும் ஜாமீன் பெற்ற ஜெயில்தார் சிங் ஆகிய 4 பேர் வழக்கை சந்தித்து வருகின்றனர். இவர்கள் மீதான வழக்கில் சுமார் 20 ஆண்டுகளுக்கு பிறகு சென்னை கூடுதல் நீதிமன்ற அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது. அதன்படி, பவாரியா கும்பலைச் சேர்ந்த ஜெகதீஷ், ராகேஷ் மற்றும் அசோக் ஆகிய மூவரும் குற்றவாளிகள் என கோர்ட்டு தீர்ப்பளித்தது. குற்றவாளிகளின் தண்டனை விவரங்கள் நவம்பர் 24ந்தேதி அறிவிக்கப்படும் என்று கோர்ட்டு தெரிவித்திருந்தது.

முன்னதாக சுதர்சனம் கொலை வழக்கின் தீர்ப்பை அறிந்து கொள்வதற்காக இந்த வழக்கில் திறம்பட செயல்பட்டு குற்றவாளிகளை பிடிப்பதற்கு மூல காரணமாக இருந்த முன்னாள் டி.ஜி.பி. ஜாங்கிட் நேற்று சென்னை கோர்ட்டுக்கு வந்திருந்தார்.

இதேபோன்று, இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த அப்போதைய போலீஸ் இன்ஸ்பெக்டர் தில்லை நடராஜன் மற்றும் தனிப்படையில்



இடம்பெற்றிருந்த போலீசார் சிலரும் வந்திருந்தனர். இந்த வழக்கில் 3 பேர் குற்றவாளி என நீதிபதி அறிவித்ததை தொடர்ந்து ஜாங்கிட் தன்னோடு பணியாற்றிய போலீஸ்படையினருக்கு வாழ்த்து தெரிவித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

அதேபோன்று, கோர்ட்டுக்கு வந்திருந்த சுதர்சனத்தின் மகனும் முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வுமான விஜயகுமார், ஜாங்கிட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த வழக்கில் தாங்கள் சந்தித்த சவால்கள் குறித்து ஜாங்கிட் நிருபர்களிடம் கூறும்போது, 'எனது போலீஸ் பணியில் இது ஒரு சவாலான வழக்கு. தமிழகத்தில் உள்ள அத்தனை குற்றவாளிகளின் சரித்திர பதிவேடுகளைபுரட்டியபோதும் எந்த துப்பும் கிடைக்கவில்லை. சுதர்சனம் வீட்டில் பதிவான கைரேகைகளை தமிழகத்தில் உள்ள சரித்திர பதிவேடு குற்றவாளிகளுடன் ஒப்பிட்டபோது, எதுவும் ஒத்துப் போகவில்லை. இதனால், வட இந்தியாவில் உள்ள முக்கிய கொள்ளை கும்பலின் கைரேகைகளோடு ஒப்பிட்டு பார்க்க முடிவு செய்தோம்.

அப்போது தான் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் சிறையில் இருந்த ஒரு கைதியின் கைரேகையோடு ஒத்து போனது. தூக்கமில்லாமல் பல இரவுகள் அலைந்து திரிந்த எங்களுக்கு இந்த கைரேகை தான் கை கொடுத்தது. இதன் பின்பு, எங்கள் விசாரணை சூடுபிடிக்க தொடங்கியது. எனது சிறப்பு படையில் இருந்த அத்தனை போலீசாரும் மிக சிறப்பாக செயல்பட்டனர். இந்த தீர்ப்பை நினைத்து பெருமைபடுகிறோம் என்றார்.

சுதர்சனத்தின் மகன் விஜயகுமார் கூறும்போது, 'உண்மையிலேயே இந்த வழக்கில் ஐ.பி.எஸ். அதிகாரி ஜாங்கிட் தலைமையிலான போலீசார் திறம்பட செயல்பட்டனர். இதற்காக எங்கள் குடும்பத்தின் சார்பில் போலீசாருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்' என்றார்.

# வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியில் ஈடுபட்ட பெண் கிராம உதவியாளர் தற்கொலை; போலீசார் தீவிர விசாரணை

திருக்கோவிலூர், நவ.23

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே உள்ள சந்தைப் பேட்டை பகுதியை சேர்ந்தவர் முபாரக். இவருடைய மனைவி ஜாகிதா பேகம் (வயது 37). இவர்களுக்கு ஒரு மகள், ஒரு மகன் உள்ளனர்.

ஜாகிதா பேகம், சிவனார்தாங்கல் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் கிராம உதவியாளராக பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணியில் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவம் வழங்குதல், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பெறுதல் உள்ளிட்ட பணிகளை அவர் மேற்கொண்டு வந்தார்.

நேற்று முன்தினம் ஜாகிதா பேகம் வழக்கம்போல் பணிக்கு சென்றார். பின்னர் வாக்காளர் படிவங்களை பூர்த்தி செய்து விட்டு மதியம் சாப்பிடுவதற்காக வீட்டிற்கு வந்தார். பின்னர் வீட்டில் தனியாக இருந்த ஜாகிதா பேகம், வீட்டில் உள்ள ஊஞ்சல் சங்கிலியில் தூக்குப்போட்டு கொண்டார்.

சிறிது நேரத்தில் வீட்டிற்கு வந்த அவருடைய உறவினர் காதர்பீ, ஜாகிதா பேகம் தூக்கில் தொங்குவதைகண்டு அதிர்ச்சியடைந்தார். பின்னர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் ஜாகிதா பேகத்தை மீட்டு சிகிச்சைக்காக திருக்கோவிலூர்தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். அங்கு ஜாகிதா பேகத்தை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு



அனுப்பி வைக்கப்பட்டது. இதுகுறித்து அவருடைய கணவர் திருக்கோவிலூர் போலீசில் புகார் கொடுத்தார். அதில் எனது மனைவியின் இறப்புக்கு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிச்சுமை தான் காரணம் எனவும், இதுகுறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிச்சுமை காரணமாக ஜாகிதா பேகம் தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்த நிலையில் கிராம உதவியாளர் ஜாகிதா பேகத்தின் சாவுக்கு நீதி கேட்டு தமிழ்நாடு அரசு கிராம உதவியாளர் சங்கத்தின் சார்பில் நேற்று திருக்கோவிலூர் தாலுகா அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு, ஜாகிதா பேகத்தின் சாவுக்கு காரணமானவா்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கண்டன கோஷம் எழுப்பினர்.

# சென்னை: கொலை வழக்கில் தொடர்புடைய ரவுடி சுட்டுப்பிடிப்பு

சென்னை, நவ.23

நேற்று முன்தினம் சென்னை இந்திரா நகர் ரெயில் நிலையம் அருகே மவுலி என்ற நபர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த ரவுடி விஜயகுமார், கவுதம், நிரஞ்சன் ஆகியோர் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக ரவுடி விஜயகுமாரை பிடிக்க முயன்றபோது போலீசாரை தாக்கி விட்டு தப்ப முயற்சித்தபோது, தற்காப்புக்காக போலீசார் விஜயகுமார் காலில் சுட்டதில் அவர் படுகாயம் அடைந்தார்.

இதனிடையே ரவுடி விஜயகுமார் கத்தியால் தாக்கியதில் மயிலாப்பூர் போலீஸ்



நிலைய காவலர் தமிழரசனுக்கு கையில் வெட்டு காயம் ஏற்பட்டது. காயமடைந்த காவலர் தமிழரசன் ராயப்பேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரவுடி விஜயகுமார் மீது 2 கொலை முயற்சி வழக்கு உள்பட 10க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளதாக கூறப்படுகிறது.

# வங்கக்கடலில் உருவாகிறது காற்றழுத்த தாழ்வுப்பகுதி

சென்னை, நவ.23

நேற்று முன்தினம் (2011 2025) தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய லட்சத்தீவு பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்து, நேற்று (21112025) காலை தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக நிலவியது.

தெற்கு அந்தமான் கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று (ஞாயிற்றுக்கிழமை) தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக உள்ளது. இது, மேற்குவடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை மறுநாள் (24ஆம் தேதி) வாக்கில், தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, அதற்கடுத்த 48 மணி நேரத்தில், மேற்குவடமேற்கு திசையில் தொடர்ந்து நகர்ந்து தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் மேலும் வலுப்பெறக்கூடும்.

இதன்காரணமாக இன்று (22112025): தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் கன மழை பெய்யவாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:

இன்று (22112025): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 3132° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 2526° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

தமிழக கடலோரப்பகுதிகள்: 24.11.2025 மற்றும் 25/11/2025: தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

வங்கக்கடல் பகுதிகள்:

22/11/2025 மற்றும் 23 112025: தெற்கு அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 65 கிலோ மீட்டர் வேகத்திலும், அந்தமான் கடல் பகுதிகள், ஏனைய தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகள் மற்றும் தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்திலும் இடையிடையே 60 கிலோ மீட்டர் வேகத்திலும் வீசக்கூடும்.

அரபிக்கடல் பகுதிகள்:

22/11/2025 முதல் 25 112025 வரை: எச்சரிக்கை ஏதுமில்லை. மேற்கண்ட தகவல்களை சென்னை வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# பெண் இன்ஸ்பெக்டருக்கு ஆபாச படம் அனுப்பியவர் கைது

நீலகிரி நவ.23

விருதுநகர் மாவட்டம் சாத்தூரை சேர்ந்தவர் முருகன் (வயது 45). இவர் நீலகிரி மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் உதவியாளராக கடந்த 2 ஆண்டுகளாக பணியாற்றி வந்தார். போலீசாருக்கு பயணப்படிக்கான ரசீது ஒதுக்கி, பணம் கொடுத்தல் உள்ளிட்ட எழுத்து பணிகளை செய்து வந்தார். இந்த நிலையில் சமீபத்தில் பிற மாவட்டத்துக்கு சென்று வந்த செலவு விவரங்களுக்கான தொகையை தருமாறு நீலகிரியில் பணிபுரியும் பெண் இன்ஸ்பெக்டர் ஒருவர்,

முருகனிடம் விண்ணப்பத்துடன் ரசீதுகளை கொடுத்து உள்ளார். அதில் அந்த இன்ஸ்பெக்டரின் செல்போன் எண் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அந்த செல்போன் எண்ணை குறித்துக்கொண்ட முருகன், பெண் இன்ஸ்பெக்டரின் வாட்ஸ்அப்புக்கு ஆபாச புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அனுப்பி உள்ளார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெண் இன்ஸ்பெக்டர், இதுகுறித்து நீலகிரி போலீஸ் சூப்பிரண்டு அலுவலகத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி, இந்திய தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் கீழ்வழக்குப்பதிவுசெய்து, முருகனை கைது செய்தனர்.

# குட்டை சகதியில் சிக்கித்தவித்த சினைப்பசு மாடு மீட்பு: தீயணைப்பு வீரர்களுக்கு மக்கள் பாராட்டு

தூத்துக்குடி நவ.23

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை அய்யனார் காலனியில் குட்டை சகதியில் சத்யன் என்பவருக்கு சொந்தமான சினைப் பசுமாடு சிக்கி உயிருக்கு போராடிக் கொண்டிருந்தது. இதுகுறித்து மாட்டின் உரிமையாளர் அளித்த தகவலின் பேரில் சிப்காட் தீயணைப்பு நிலைய அலுவலர் கார்த்திகேயன் தலைமையில் வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.



மேலும் போக்குவரத்து அலுவலர் புன்னவனகட்டி, ஏட்டு யோகமணி சங்கர் மற்றும் தீயணைப்பு வீரர்கள் தவசி, சக்திவேல், வெங்கடசாமி ஆகியோர் துரிதமாக செயல்பட்டு குட்டையில் இறங்கி பல மணி நேரம் போராடி கயிறுகள் மூலம் சினைப் பசு மாட்டினை சகதியிலிருந்து பத்திரமாக உயிருடன் மீட்டு உரிமையாளரிடம் ஒப்படைத்தனர். தீயணைப்பு வீரர்களின் சிறப்பான சேவையை அப்பகுதி மக்கள் வெகுவாக பாராட்டினர்.

# தூத்துக்குடியில் நில அளவை அலுவலர்கள் காத்திருப்பு போராட்டம்

தூத்துக்குடி நவ.23

தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு சார்பில் நில அளவை நிர்வாகமும் அரசும் பணிச்சுமையை குறைக்கவும், ஒரே நேரத்தில் பல்வேறு பணிகளை செய்யாமல் பணியை முறைப்படுத்தி முன்னுரிமைப்படி பணிகளை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும், பட்டா மாறுதல் உள்ளிட்ட நிலஅளவை பணிகளை கருத்தில் கொண்டு உடனடியாக நிலஅளவர் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

துணை ஆய்வாளர், ஆய்வாளர்கள் ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும், ஒப்பந்த முறையில் உரிமம் பெற்ற அளவர்களை நியமிப்பதை முற்றிலும் கைவிட்டு கால முறை ஊதியத்தில் பணியமர்த்த வேண்டும், புதிதாக உருவாக்கப்பட்டு உள்ள குறுவட்டங்களுக்கு குறுவட்ட அளவர் பணியிடங்களை உருவாக்கி அரசாணை வழங்க வேண்டும் என்



பது உள்ளிட்ட 18 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 19ம் தேதி முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனால் அலுவலகம் வெறிச்சோடி காணப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு நில அளவையர் அலுவலர்கள் சார்பாக மாவட்ட தலைவர் காளிராஜ் தலைமையில் காத்திருப்பு போராட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் நிலஅளவையர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் 46 போலீசாருக்கு பொது மாறுதலுக்கான கலந்தாய்வு

தூத்துக்குடி நவ.23

தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து உட்கோட்ட காவல் நிலையங்கள் மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையங்களில்

3 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் இரண்டாம் நிலை காவலர்கள் முதல் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர்கள் வரை உள்ள 46 காவல் துறையினருக்கு இன்று (21.11.2025) பொது மாறுதலுக்கான கலந்தாய்வு கூட்டம் மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில்வைத்து மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் தலைமையில் நடைபெற்றது.

இதில் மேற்சொன்ன காவல்துறையினருக்கு அவர்களின் விருப்பத்திற்கேற்ப மற்றும்காவல்நிலையங்களில் உள்ள காலிப்பணியிடங்களின் அடிப்படையில் மாவட்ட எஸ்.பி. பொது மாறுதல் வழங்கி உத்தரவிட்டார்.

இந்த கலந்தாய்வு கூட்டத்தில் தூத்துக்குடி தலைமையிடத்து காவல்துறை ஏ.டி.எஸ்.பி. ஆறுமுகம், மதுவிலக்கு அமலாக்க



பிரிவு டி.எஸ்.பி. குரு வெங்கட்ராஜ் மற்றும் மாவட்ட காவல் அலுவலக அமைச்சுப்பணி கண்காணிப்பாளர்கள் உட்பட அமைச்சு பணி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
23.11.2025

# கன்னியாகுமரி: சாலையில் மலைப்பாம்பு செல்வதாக பரவும் வீடியோ அரசு விளக்கம்



சென்னை, நவ.23

தமிழக அரசின் தகவல் சரிபார்ப்பகம் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

கன்னியாகுமரி மாவட்டம் தாமரைக் குளம் சாலையில் ராட்சத பாம்பு ஊர்ந்து செல்வதாகக் காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

இது தவறான தகவல்.

இந்தக் காணொளி தமிழ்நாட்டில் எடுக்கப்பட்டதல்ல. கடந்த 2022 ஆம் ஆண்டு கேரள மாநிலம் வயநாட்டில் ராட்சத பாம்பு சாலையைக் கடந்து செல்வதாகக் குறிப்பிட்டு இதே காணொளியைத் தனியார் ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ளது. இதை கன்னியாகுமரி என்று திரித்து வதந்தி பரப்பி வருகிறார்கள்.

தவறான தகவலை நம்பாதீர்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மெட்ரோ ரெயில் விவகாரம்; தி.மு.க.வின் மற்றொரு நாடகம் செல்லூர் ராஜு குற்றச்சாட்டு

மதுரை, நவ.23

மதுரையில் முன்னாள் அ.தி.மு.க. அமைச்சர் செல்லூர் ராஜு இன்று செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"மதுரைக்கு வர வேண்டிய மெட்ரோ ரெயில் திட்டத்தை மத்திய அரசு தடுத்து விட்டதாகவும், அதற்காக தி.மு.க. போராடுவதாகவும் சிலர் செய்தி வெளியிடுவார்கள். ஆனால் அது உண்மை கிடையாது. இது தி.மு.க.வின் மற்றொரு நாடகம். மத்திய அரசுக்கு அனுப்பப்பட்ட DPR அறிக்கையில் நிறைய குளறுபடிகள் இருக்கின்றன.

மெட்ரோ ரெயில் கொள்கை 2017ன்படி, மெட்ரோ திட்டம் கொண்டு வருவதற்கு 17 லட்சம் மக்கள் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் தி.மு.க. அரசு 15 லட்சம் தான் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது. தி.மு.க. ஆட்சிக்கு வந்து நான்கரை ஆண்டுகள் ஆகிறது. இந்த காலகட்டத்திற்குள் முறையாக DPR அறிக்கையை தயார் செய்திருக்க முடியாதா? மதுரை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசனிடம் ஆலோசனை கேட்டு, தொழில்நுட்ப பிழைகளை சரிசெய்து அறிக்கையை அனுப்பியிருக்கலாம்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுமியிடம் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்ட தொழிலாளிக்கு 20 ஆண்டுகள் சிறை

திருவண்ணாமலை நவ23

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் தாலுகா பேட்டை கிராமம் வள்ளுவர் காலனி பகுதியை சேர்ந்தவர் குமார் (40 வயது). இவர், கடந்த 2016ம் ஆண்டு ஜனவரி மாதம், 6 வயதுடைய சிறுமியிடம் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்டு உள்ளார். இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் போளூர் அனைத்துமகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். அதன்பேரில் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி குமாரை கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைந்த கோர்ட்டு வளாகத்தில் உள்ள போக்சோ வழக்குகளுக்கான சிறப்பு விசாரணை கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் நேற்று இவ்வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது வழக்கை விசாரித்த நீதிபதி காஞ்சனா தீர்ப்பு கூறினார்.

அதில், சிறுமியிடம் பாலியல் வன்புணர்ச்சியில் ஈடுபட்ட தொழிலாளி குமாருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.10 ஆயிரம் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

பின்னர் அவரை போலீசார் வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

# 8 வயது சிறுவனுக்கு பாலியல் துன்புறுத்தல்: வாலிபருக்கு சாகும் வரை ஆயுள் தண்டனை



தூத்துக்குடி, நவ.23

தூத்துக்குடி மாவட்டம், குரங்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2024ம் ஆண்டு 8 வயது சிறுவனை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில் விளாத்திகுளம் வேம்பார் பகுதியைச் சேர்ந்த அந்தோணி ராபர்ட் கென்னடி மகன் தாமஸ் அற்புத ரகசியம் (வயது 20) என்பவரை குரங்குடி காவல் நிலைய போலீசார் போக்சோ மற்றும் கொலை குற்றத்திற்கான சட்டப்பிரிவின் கீழ் கைது செய்தனர்.

இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி பிரீத்தா இன்று (21.11.2025) குற்றவாளி தாமஸ் அற்புத ரகசியம் என்பவருக்கு (இயற்கையாக மரணம் வரும் வரை) ஆயுள் தண்டனை, ரூ.15 ஆயிரம் அபராதம் விதித்தும் மேலும் பாதிக்கப்பட்ட சிறுவனின் குடும்பத்திற்கு அரசு நிவாரண நிதியிலிருந்து ரூ.10 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டு தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில் சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய குரங்குடி காவல் நிலைய இன்ஸ்பெக்டர் வெங்கடேஷ் பெருமாள் மற்றும் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் முத்துலெட்சுமி, விசாரணைக்கு உதவியாக இருந்த முதல் நிலை காவலர் மணிலெட்சுமி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பாராட்டினார். தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆண்டு இது வரை மொத்தம் 26 போக்சோ வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# ஜூனியர் ஆக்கி உலக கோப்பை வரவேற்பு நிகழ்ச்சியை புறக்கணித்த அருள் எம்.எல்.ஏ.

ஜூனியர் ஆக்கி உலக கோப்பை வரவேற்பு நிகழ்ச்சி சேலத்தில் உள்ள அரசு உதவிபெறும் பள்ளி ஒன்றில் நடந்தது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க சேலம் மேற்கு தொகுதி பா.ம.க. எம்.எல்.ஏ.வான அருள் வந்தார். அப்போது அவர் அங்கிருந்த மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவரஞ்சனிடம், நிகழ்ச்சியில் பங்கேற்க எம்.எல்.ஏ.வாக இருக்கும் எனக்கு ஏன் முறையாக அழைப்பு விடுக்கவில்லை எனக்கூறி அவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதுபற்றி அறிந்த விழா ஏற்பாட்டாளர்கள் அங்கு வந்து அருள் எம்.எல்.ஏ.வை சமாதானப் படுத்தினர். அதற்கு விளையாட்டுத்துறை சார்பில் நடக்கும் எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் முறையாக அழைப்பு விடுப்பது இல்லை என்று அதிகாரிகள் மீது அவர் குற்றச்சாட்டு தெரிவித்தார். இதைத்தொடர்ந்து அமைச்சர் ராஜேந்திரன் பங்கேற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் பங்கேற்காமல் அருள் எம்.எல்.ஏ. புறக்கணித்து தனது காரில் ஏறி அங்கிருந்து புறப்பட்டு சென்றார். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் (23.11.2025)

**மேஷம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும் நாள். நண்பர்களிடம் இருந்து ஆதரவு கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் சிறிய லாபம் உண்டு.

**ரிஷபம்:** உழைப்புக்குஏற்றபலன்கிடைக்கும் நாள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். செலவுகள்கட்டுப்பாட்டில் இருக்கும்.

**மிதுனம்:** சில எதிர்பாராத தடை ஏற்பட்டாலும் அதைக் கடந்து முன்னேறுவீர்கள். நண்பர்கள் உங்களை ஊக்குவிப்பர்.

**கடகம்:** வீட்டு வேலைகளில் அதிக ஈடுபாடு. உடல் சோர்வு இருந்தாலும் மனநிம்மதி உண்டு. புதிய உறவு உருவாக வாய்ப்பு.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுங்கள், சாதனை உங்கள் பக்கம். அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

**கன்னி:** நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும் நாள். சொத்து சம்பந்தமான விவகாரத்தில் நல்ல முடிவு.

**துலாம்:** புதிய வாய்ப்புகள் வரலாம். அதிர்ஷ்டம் உங்களுடன் இருக்கும். நண்பர்கள் நம்பிக்கையுடன் நடப்பர்.

**விருச்சிகம்:** உடல்நலம் கவனிக்க வேண்டிய நாள். உறவினர்களிடம் நிதானமாக பேசுங்கள். பொறுமைதேவை.

**தனுசு:** வெளிநாட்டுச் செய்தி உங்களை மகிழ்விக்கும். கல்வியில் முன்னேற்றம். தொழிலில் புதிய வாய்ப்பு.

**மகரம்:** அழுத்தமான பணி இருந்தாலும் மனநிம்மதி உண்டு. குடும்பத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சி தொடங்க சிறந்த நாள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. எதிரிகள் விலகுவர்.

**மீனம்:** மன அமைதி பெறுவீர்கள். உறவினர்கள் மதிப்புடன் நடப்பர். நீண்டநாள் குழப்பம் தீரும்.



குன்னூரில் தமிழக அரசு சார்பாக வாசகர் வட்ட நிறைவு விழா மற்றும் நீலகிரி மாவட்ட நூலக ஆணைக்குழு சார்பாக 58வது ஆண்டு தேசிய நூலக வாரவிழாவும் நடைபெற்றது இந்நிகழ்வில் பல்வேறு பள்ளிகளை சார்ந்த மாணவர்களுக்கிடையே பேச்சு போட்டி,கட்டுரை போட்டி,கவிதை ஒப்பித்தல் போட்டி,ஓவிய போட்டி ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்று மாணாக்கர்களுக்கு சான்றிதழ்களும் கேடயங்களும் வழங்கப்பட்டன.இதில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட நூலக அலுவலர் கிளமெண்ட்,சுந்தர பாண்டியன் தலைவர் வட்டக்கிளை நூலகம்,சிறப்பு விருந்தினராக நகரமன்ற உறுப்பினர் ஜாகீர் ஹுசேன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ரீரிலீஸாகும் "அஞ்சான்" படத்தின் புதிய டிரெய்லர் வெளியீடு




நடிகர் சூர்யா நடிப்பில் கடந்த 2014 ம் ஆண்டு வெளியான படம் 'அஞ்சான்'. இத்திரைப்படத்தை இயக்குனர் லிங்குசாமி இயக்கியிருந்தார். இந்த படத்தினை 'திருப்பதி பிரதர்ஸ்' நிறுவனம் தயாரித்திருந்தது. இதில் சமந்தா கதாநாயகியாக நடித்திருந்தார். மேலும் வித்யூத் ஜம்வால், சூரி, மனோஜ் பாஜ்பாய் உள்ளிட்ட பலர் நடித்திருந்தனர்.

இந்த படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருந்தார். கமர்ஷியல் படமாக வெளிவந்த அஞ்சான் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படம் வெளியாகி கிட்டத்தட்ட 11 ஆண்டுகள் ஆன நிலையில் படத்தை ரீரிலீஸ் செய்ய படக்குழு திட்டமிட்டுள்ளது.

'அஞ்சான்' படத்தை ரீஎடிட் செய்து வருகிற 28ந் தேதி ரீரிலீஸ் செய்ய உள்ளதாக தயாரிப்பு நிறுவனம் சமீபத்தில் அறிவித்திருந்தது.

இந்நிலையில் ரீ எடிட் செய்யப்பட்ட அஞ்சான் படத்தின் புதிய டிரெய்லரை படக்குழு வெளியிட்டுள்ளது.

# ஓடிடியில் விஷ்ணு விஷாலின் 'ஆர்யன்' ... எப்போது, எதில் பார்க்கலாம்?




விஷ்ணு விஷால் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'ஆர்யன்'. இப்படத்தை அறிமுக இயக்குனரான பிரவீன் இயக்கியுள்ளார். இதில் ஷ்ரத்தா ஸ்ரீநாத், வாணி போஜன் மற்றும் செல்வராகவன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்தை விஷ்ணு விஷால் ஸ்டூடியோஸ் தயாரித்துள்ளது. 'ஆர்யன்' படம் படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் கடந்த அக்டோபர் 31ம் தேதி வெளியானது. ஜிப்ரான் இப்படத்திற்கு இசையமைத்திருந்தார்.

இந்த நிலையில், ஆர்யன் படத்தின் ஓடிடி ரிலீஸ் தேதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்படம் வருகிற 28ந் தேதி நெட் பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# விமலின் "மகாசேனா" படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




'பசங்க' படத்தின் மூலம் அறிமுகமாகி 'களவாணி, 'கேடி பில்லா கில்லாடி ரங்கா', 'கலகலப்பு' போன்ற வெற்றி படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் நடிகர் விமல். இவரது நடிப்பில் 'சார்' படம் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து வெப் தொடர்கள் மற்றும் சில படங்களிலும் கமிட் ஆகி நடித்து வருகிறார். தற்போது வடம் படத்தில் நடித்து வருகிறார்.

இதனிடையே, தினேஷ் கலைச்செல்வன் இயக்கத்தில் விமல், யோகி பாபு, சிருஷ்டி டாங்கே ஆகியோர் முதன்மை கதாபாத்திரங்களில் நடித்துள்ள படம் 'மகாசேனா'. இப்படம் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய 5 மொழிகளில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 'மகாசேனா' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை பார்க்கும்போது கதை வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்தவையாக இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், 'மகாசேனா' படம் டிசம்பர் 12ந்தேதி வெளியாகும் என போஸ்டர் வெளியிட்டு படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

# 'நான் அப்படி இருக்கும்போதுதான் அழகாக இருந்ததாக பலர் சொன்னார்கள்' கீர்த்தி சுரேஷ்

நடிகை கீர்த்தி சுரேஷ் சந்துரு இயக்கத்தில் 'ரிவால்வர் ரீட்டா' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். பேஷன் ஸ்டூடியோஸ் மற்றும் தி ரூட் நிறுவனங்கள் இணைந்து இந்த படத்தை தயாரித்திருக்கிறது. இப்படம் வருகிற 28ம் தேதி தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் வெளியாகிறது.

தற்போது 'ரிவால்வர் ரீட்டா' படத்தின் புரோமோஷன் நிகழ்ச்சியில் கீர்த்தி சுரேஷ் பங்கேற்று வருகிறார். இதற்கிடையில், ஒரு நேர்காணலில் பேசிய அவர், குண்டாக இருக்கும்போது தான் அழகாக இருந்ததாக பலர் கூறியதாக தெரிவித்தார். அவர் பேசுகையில்,

"நான் குண்டாக இருந்தபோது மிகவும் அழகாக இருந்தேன் என்று பலர் கூறுகிறார்கள். அந்த நேரத்தில், நான் 10 தோசைகள்,10 இட்லிகள் சாப்பிட்டேன். இப்போது எனக்கு எந்த உணவுக் கட்டுப்பாடும் இல்லை. ஆனால் நான் உடற்பயிற்சி செய்கிறேன்.

1012 மாதங்களில் சுமார் 10 கிலோ எடையைக் குறைத்துள்ளேன். நடிப்புடன் ஆரோக்கியத்தையும் பராமரிப்பது முக்கியம் என்று நான் நினைக்கிறேன். 4 ஆண்டுகளுக்கு முன்புதான் நான் என் சருமத்தை கவனித்துக் கொள்ள ஆரம்பித்தேன். இதெல்லாம் 'மகாநதி'க்குப் பிறகுதான் தொடங்கியது," என்றார்.

# 2வது டெஸ்ட்: சிறப்பான பேட்டிங்.. முதல் நாளில் தென் ஆப்பிரிக்கா 247 ரன்கள் சேர்ப்பு



இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் கொல்கத்தாவில் நடந்த முதலாவது டெஸ்டில் தென் ஆப்பிரிக்கா 30 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 10 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்த நிலையில் இந்தியா தென் ஆப்பிரிக்கா இடையிலான 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி அசாம் மாநிலம் கவுகாத்தியில் உள்ள பார்சபரா கிரிக்கெட் ஸ்டேடியத்தில் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணியின் கேப்டன் பவுமா பேட்டிங்கை தேர்வு செய்தார். இந்திய அணியில் 2 மாற்றங்களாக சுப்மன் கில், அக்சர் படேலுக்கு பதிலாக சாய் சுதர்சன் மற்றும் நிதிஷ் ரெட்டி சேர்க்கப்பட்டனர். தென் ஆப்பிரிக்க அணியில் கார்பின் போஷுக்கு பதிலாக செனுரன் முத்துசாமி அணியில் இடம்பிடித்தார்.

அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய தென் ஆப்பிரிக்க அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக மார்க்ரம் ரிக்கல்டன் களமிறங்கினர். இந்திய பந்துவீச்சை திறம்பட சமாளித்த இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 82 ரன்கள் பார்ட்னர்ஷிப் அமைத்த நிலையில் பிரிந்தது. மார்கரம் 38 ரன்களில் பும்ரா பந்துவீச்சில் போல்டானார். சிறிது நேரத்திலேயே ரிக்கல்டன் 35 ரன்களில் குல்தீப் சுழலில் சிக்கினார்.

இதனையடுத்து ஸ்டப்ஸ் கேப்டன் பவுமா ஜோடி சேர்ந்து அணிக்கு வலு சேர்த்தனர். நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்த ஜோடி 84 ரன்களில் பிரிந்தது. பவுமா 41 ரன்களிலும், ஸ்டப்ஸ் 49 ரன்களிலும் ஆட்டமிழந்தனர். பின்னர் வந்த வீரர்களில் டோனி டி சோர்சி (28 ரன்கள்), வியான் முல்டர் (13 ரன்கள்) அகியோர் விரைவில் ஆட்டமிழந்தனர்.

சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்திய தென் ஆப்பிரிக்க அணி முதல் நாள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 247 ரன்கள் அடித்துள்ளது. செனுரன் முத்துசாமி 25 ரன்களுடனும், கைல் வெர்ரைன் ஒரு ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளும், ஜடேஜா, சிராஜ் மற்றும் பும்ரா தலா ஒரு விக்கெட் வீழ்த்தியுள்ளனர். நாளை 2வது நாள் ஆட்டம் நடைபெற உள்ளது.

# டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் முறை.. தென் ஆப்பிரிக்க அணி அரிய சாதனை



இந்தியா தென் ஆப்பிரிக்கா இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 2வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கவுகாத்தியில் இன்று தொடங்கியது.

இதில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் தேர்வு செய்த தென் ஆப்பிரிக்க அணி முதல் நாள் முடிவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 247 ரன்கள் அடித்துள்ளது. செனுரன் முத்துசாமி 25 ரன்களுடனும், கைல் வெர்ரைன் ஒரு ரன்னுடனும் களத்தில் உள்ளனர். இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 3 விக்கெட்டுகளும், ஜடேஜா, சிராஜ் மற்றும் பும்ரா தலா ஒரு விக்கெட் வீழ்த்தியுள்ளனர்.

இந்த ஆட்டத்தில் தென் ஆப்பிரிக்க அணியின் டாப் 4 பேட்ஸ்மேன்களான மார்க்ரம் 38 ரன்களும், ரிக்கல்டன் 35 ரன்களும், ஸ்டப்ஸ் 49 ரன்களும், பவுமா 41 ரன்களும் அடித்து ஆட்டமிழந்தனர். ஒருவர் கூட அரைசதம் அடிக்கவில்லை.

டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இன்னிங்ஸில் அணியின் டாப் 4 வீரர்கள் யாரும் அரைசதம் அடிக்காமல் ஒவ்வொருவரும் 35 அல்லது அதற்கு மேல் ரன் அடிப்பது இதுவே முதல் முறையாகும். இந்த அரிய சாதனையை முதல் முறையாக தென் ஆப்பிரிக்க அணி படைத்துள்ளது.

# மகளிர் கிரிக்கெட்: அயலாந்துக்கு எதிரான டி20, ஒருநாள் தொடர் தென் ஆப்பிரிக்க அணி அறிவிப்பு



அயர்லாந்து மகளிர் கிரிக்கெட் அணி தென் ஆப்பிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் ஒருநாள் தொடரில் விளையாட உள்ளது.

இதில் இவ்விரு அணிகள் இடையே முதலில் டி20 தொடரும் அதனை தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடைபெற உள்ளன. அதன்படி முதல் டி20 போட்டி டிசம்பர் 5ம் தேதி நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்த தொடருக்கான தென் ஆப்பிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது. லாரா வால்வார்ட் தலைமையிலான அந்த அணியில் ஓய்விலிருந்து திரும்பிய முன்னாள் கேப்டன் டேன் வான் நீகெர்க் இடம்பெற்றுள்ளார்.

தென் ஆப்பிரிக்க அணி விவரம்: டி20 அணி: லாரா வால்வார்ட் (கேப்டன்), நாடின் டி க்ளெர்க், அன்னேரி டெர்க்சன், சினாலோஜாஃப்டா, மரிசான்கப், அயபோங்காகாக்கா, மசபடாகிளாஸ், சுனே லூஸ், கராபோ மெசோ, நோன்குலுலேகோம்லாபா, செஷ்னி நாயுடு, நோண்டுமிசோ ஷாங்காஸ், க்ளோ ட்ரையன், பே டன்னிக்லிப், டேன் வான் நீகெர்க்.

ஒருநாள் அணி: லாரா வால்வார்ட் (கேப்டன்), தஸ்மின் பிரிட்ஸ், லாரா குடால், அயன்டா ஹ்லுபி, சினாலோ ஜாப்டா, லியா ஜோன்ஸ், சுனே லூஸ், எலிஸ்மாரி மார்க்ஸ், கராபோ மெசோ, நோன்குலுலேகோ ம்லாபா, துமி செகுகுனே, நோண்டுமிசோ ஷங்கசே, மியான் ஸ்மிட், பே டன்னிக்லிப், டேன் வான் நீகெர்க்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.